**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 178/2017**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 10.10.2025 | | |
| பெயர்: | பானுமதி<br>(DW– 1 Cross ) | கணவர் பெயர்: | ரவிச்சந்திரன் |
| கிராமம்: | சீர்காழி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | /2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 10.10.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.07)**

1. மயிலாடுதுறை கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 124/2009 என்று சரஸ்வதி, சுந்தரமூர்த்தி இருவரும் என் மீதும், தலைஞாயிறு கூட்டுறவு சர்க்கரை ஆலை மீதும் வழக்கு தொடர்ந்து முடிவு பெற்றது என்றால் சரிதான். அந்த வழக்கில இறந்த ரவிச்சந்திரனுக்கு நானும், வாதிகளின் தாயார் சரஸ்வதியும் சட்டப்படியான வாரிசுகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரிதான். சரஸ்வதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதனால் சரஸ்வதிக்கு கிடைக்க வேண்டிய பலன்கள் அனைத்தும் வாரிசு அடிப்படையில் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

2. வாதிகளுக்கு இந்த வழக்கில் சட்டப்படி பாகம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. அ.வ.எண். 124/2009 வழக்கில் ரவிச்சந்திரனுக்கு கிடைக்கக்கூடிய பண பலன்கள் மட்டும் தான் எனக்கு கிடைக்கும் என்றும் மற்ற பலன்கள் கிடைக்காது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.11 மற்றும் 12 ஆவணத்தில் வழக்கு

சொத்துகள் பற்றி எந்த தீர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் வாதிகளின் வழக்கை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.14)**